# DEPOSITION OF WITNESS
## In the Court of Judicial Magistrate No.I, Mettur
## Case No : C.C.No.104/2020

Prosecution witness :**அ.சா.1** **Date : 21.06.2023**

| | |
|---|---|
| **Name : தங்கராஜ்** | Caste : SC |
| **Father's Name : ராமசாமி** | Calling : வெல்டிங் |
| Village : மேட்டூர் | Religion : இந்து |
| Taluk : மேட்டூர் | Age : 39 |

(A1, A3, A4 present. A2 absent. Filed 317 CrPC petition and allowed)

எதிரி தரப்பில் கு.வி.மு.ச 311 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்கு சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1) 1வது எதிரி மோகன்ராஜ் எங்கள் பகுதியில் பஞ்சாயத்து வார்டு மெம்பர் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் பகுதி பட்டா நிலமா அல்லது புறம்போக்கு நிலமா என்றால் HSD பட்டா நிலம் ஆகும். அது என் பாட்டி பெயரில் உள்ளது. நான் குடியிருக்கும் பகுதி அரசு புறம்போக்கு இடம் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் யார் யார் வீடு உள்ளது என்றால் கிழக்கு பக்கம் சத்யா என்பவர் வீடும் மேற்கு பக்கம் ஆறுமுகம் என்பவர் வீடு உள்ளது. தெற்கு பக்கம் தடம் உள்ளது. வடக்கு பக்கம் மலர்கொடி வீடு உள்ளது. நான் அந்த பகுதியில் ரோட்டை ஆக்கிரமித்து வீடு கட்டிக்கொண்டிருந்தேன் என்றும் அது சம்மந்தமாக எதிரி மோகன்ராஜ் வருவாய் கோட்டாட்சியரிடம் என் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பிருந்தே எனக்கும் எதிரிகள் குடும்பத்தாருக்கும் இடையே முன்விரோதம் இருந்தது என்றால் இல்லை. சம்பவம் எப்போது நடந்தது என்றால் மாலை 6-30 மணியளவில் நடந்தது அது இருட்டான நேரம் என்றால் இருட்டாகதான் இருந்தது ஆனால் ஆள் வருவதுபோவது தெரியும்.

2) என்னை எதிரிகள் அடித்தபோது அக்கம் பக்கத்தில் குடியிருந்தவர்கள் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். அடிப்பட்டவுடன் என்னை யார்

மருத்துவமனைக்கு கூட்டிவந்தார் என்றால் சிவராஜ் என்பவர் கூட்டிவந்தார். சிவராஜ் எங்கு குடியிருக்கிறார் என்றால் நவப்பட்டியில் குடியிருக்கிறார். நவப்பட்டிக்கும் நான் குடியிருக்கும் இடத்திற்கும் இடையே 4 கி.மீ தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். போன் செய்து சிவராஜ் சம்பவயிடத்திற்கு வந்தாரா என்றால் இல்லை அவர் என் வீட்டில் இருந்து 200 மீட்டர் தூரத்தில் அவரது பெரியப்பா இடத்தில் மாடு கட்டிவைத்துள்ளார். சிவராஜ்க்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் என் மகன் போன் செய்து சொன்னார். என்னிடம் இருசக்கர வாகனம் உள்ளதா என்றால் உள்ளது. என் வீட்டில் இருந்து மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு வரும் வழியில்தான் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு சென்று எனக்கு ஏற்பட்ட காயத்தை காண்பித்தேனா என்றால் இல்லை. நேராக மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். பொய் வழக்கு என்பதால்தான் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தால்தான் புகார் கொடுக்கமுடியும் என்று மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் 4 நபர்கள் அடித்ததாக மருத்துவரிடம் சொன்னேன் என்றால் சரிதான். என்னை மருத்துவர் விசாரித்தபோது தெரிந்த 4 ஆண்களும் 1 பெண்ணும் கத்தியால் தாக்கியதாக சொன்னேன் என்றால் அடித்ததாகதான் சொன்னேன். கத்தியால் தாக்கியதாக சொல்லவில்லை. அந்த பெண் யாரென்றால் எதிரி சேகரின் மனைவி நல்லம்மாள். நல்லம்மாள் என்னை எதனால் தாக்கினார் என்றால் கையால் தலை மற்றும் முதுகின் மீது அடித்தார். மருத்துவரிடம் எதிரிகள் என்னை கல் மற்றும் கையால் அடித்ததாக சொன்னேனா என்றால் ஆமாம். என்னுடன் வேறு யார் சிகிச்சையில் சேர்ந்தார்கள் என்றால் என் தம்பி மணிவண்ணன் சிகிச்சையில் சேர்ந்தார். அவரையும் என்னை விசாரித்தபோதுதான் மருத்துவர் விசாரித்தாரா என்றால ஆமாம். அவரும் 4 ஆண்களும் 1 பெண்ணும் தாக்கியதாக சொன்னார் என்றால் சரிதான். அன்று இரவு 7 மணிக்கு மேட்டுர் அரசு மருத்துவமனையில் போலிசார் விசாரணை

செய்தார்கள் என்றால் சரிதான். என்னையும் மணிவண்ணனையும விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போது எங்களுடன் என் மனைவி, என் தம்பி கார்த்தி மற்றும் சிவராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

3) போலிசார் என்னை விசாரித்தபோது என்ன நடந்தது என்று சொன்னேன் என்றால் சரிதான். நான் சொனனதை போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் ஆமாம். போலிசார் என்னை விசாரித்தபோது 4 ஆண்களும் 1 பெண்ணும் தாக்கியதாக சொன்னேனா என்றால் சொன்னேன். என் தம்பியையும் போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலிசார் வாக்குமூலத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. சம்பவம் நடந்த அன்றைய தினம் என்னை போலிசார் விசாரித்து வாக்குமூலம் எழுதி கையெழுத்து வாங்கினார்களா என்றால் விசாரித்தார்கள் ஆனால் எழுதி கையெழுத்து வாங்கவில்லை. சம்பவம் நடந்த 3 ஆம் தேதி நான்தான் எதிரிகளை தாக்கிவிட்டு பொய்யாக மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக மருத்துவமனையில் படுத்துக்கொண்டதால்தான் வழக்கு பதிவுசெய்யவில்லை என்றால் சரியல்ல. ரத்தக்கரை படிந்த துணிகளை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. 5 ம் தேதி எத்தனை போலிசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் ஒரு போலிசார் மட்டும் மதியம் 2, 3 மணியளவில் வந்து விசாரித்தார். அப்போதும் என்னை 4 ஆண்களும் 1 பெண்ணும் தாக்கியதாக சொன்னேனா என்றால் சொன்னேன். நான் படித்து பார்த்து கையெழுத்து செய்த புகார் வாக்குமூலத்தில் என்னை 4 ஆண்களும் 1 பெண்ணும் தாக்கியதாக இருந்ததா என்றால் இருந்தது. அன்றைய தினம் என்னிடம் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் புகார் வாக்குமூலத்தில் ஒரு கையெழுத்து மட்டும் வாங்கினார்கள் வேறு எந்த கையெழுத்தும் நான் செய்யவில்லை. அப்போது என்னுடன் எனது பக்கத்து பெட்டில்தான் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றால் ஆமாம். அவரையும் போலிசார் விசாரித்தார்களா என்றால் ஆமாம். என் தம்பியும் நான்

சொன்னதுபோல்தான் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு என்னை போலிசார் எப்போது விசாரித்தார்களா என்றால் மீண்டும் 7 ம் தேதி சேலம் அரசு மருத்துவமனையில் மாலை 4, 5 மணிக்கு விசாரித்தார்கள். அப்போது என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் கையெழுத்து வாங்கவில்லை என்னை 4 ஆண்களும் 1 பெண்ணும் தாக்கியதாகதான் சொன்னேன்.

4) எதிரிகள் எங்கு முள்ளை வெட்டிப்போட்டார்கள் என்றால் என் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள தடத்தில் போகாதவாறு முள்ளை வெட்டிப்போட்டார்கள். எப்போது முள்ளை போட்டார்கள் என்றால் அடிக்கடி எதிரிகள் முள்ளை வெட்டிபோடுவார்கள் நாங்கள் அதை எடுத்துவிட்டு செல்வோம். எதிரிகள் முள்ளை வெட்டிபோடுவது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் எதிரிகள் அடிக்கடி முள்ளை வெட்டிபோட்டிருந்தால் புகார் கொடுத்திருபபேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் வந்தபோது நான் எங்கு இருந்தேன் என்றால் என் வீட்டிற்கு கிழக்கு பக்கம் தண்ணீர் காயவைத்துக்கொண்டிருந்தேன். என் மனைவி அப்போது வீட்டினுள் இருந்தார். என் வீட்டில் இருந்து என் தம்பியின் வீடு 200 மீட்டர் தள்ளி உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் 5 பேரும் கூட்டமாக வந்தார்களா என்றால் ஒருவர் பின் ஒருவராக வந்தார்கள். முதலில் எதிரி மோகன்ராஜ் வந்து தகாத வார்த்தையால் திட்டிவிட்டு சென்றுவிட்டார். எதிரி ரமேஷ் வந்து கல்லை எடுத்து என் குரல்வளையை பிடித்துக்கொண்டு தலையின் மீது குத்தினார். நான் கீழே விழுந்துவிட்டேனா என்றால் இல்லை. அதன்பின் எதிரி ராமு கல்லை எடுத்து நெற்றியின் மீதும் மூக்கின் மீதும் குத்திவிட்டு போய்விட்டார். அதன் பின் நல்லம்மாள் வந்து என் முதுகு மற்றும் கையின் மீது அடித்துவிட்டார். மோகன்ராஜ் தகாத வார்த்தையால் பேசியபோதே என் மனைவி வீட்டில் இருந்து வெளியே வந்துவிட்டார். என்னை மோகன்ராஜ் 5 நிமிடங்களாக திட்டிக்கொண்டிருந்தார். அப்போது என் மனைவி எதிரிகள் என்னை

அடித்தபோது தடுத்தாரா என்றால் குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டிருந்ததால் தடுக்கவில்லை. என் மகன் அம்பேத்கார் என்பவர் என் தம்பி மணிவண்ணனுக்கு செல்போனில் தகவல் கொடுத்தார். என் மகன் அம்பேத்கார் என்பவர் என் தம்பி மணிவண்ணனுக்கு செல்போனில் தகவல் கொடுத்த விவரம் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் குரல்வளையை எதிரிகள் நசுக்கியபோது காயம் ஏற்பட்டதா என்றால் நகக்கீறல்கள் இருந்தது. மருத்துவர் குரல்வளையை பரிசோதித்தாரா என்றால் இல்லை. என்னை அடித்த கல்லின் அடையாளம் காண்பிக்கமுடியுமா என்றால் கருங்கல்லால் என்னை அடித்தார்கள். குறிப்பிட்ட அடையாளம் இல்லை என்றால் கருங்கல்லால்தான் அடித்தார்கள். மருத்துவர் என்னை விசாரித்தபோது எதிரிகள் டேக்சாவில் அடித்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொன்னதுபோல் எதிரிகள் என்னை அடிக்கவும் இல்லை நான் அந்த இடத்தில் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் 1வது எதிரி புகார் கொடுத்ததால் அவர் மீது விரோதம் கொண்டு நானும் என் குடும்பத்தாரும் எதிரிகளை தாக்கிவிட்டு அதில் இருந்து தப்பிக்கவேண்டி பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளை தாறுமாறாக தாக்கியபோது அப்போது எங்களுக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகளின் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 2வது எதிரி ரமேஷ் காவலராக உள்ளார் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் மேற்படி 2வது எதிரி ரமேஷ் ஊரிலேயே இல்லை என்றும் பொய்யாக நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**

# DEPOSITION OF WITNESS
## In the Court of Judicial Magistrate No.I, Mettur
## Case No : C.C.No.104/2020

Prosecution witness :அ.சா.2 **Date : 21.06.2023**

| | |
|---|---|
| **Name : மணிவண்ணன்** | Caste : SC |
| **Father's Name : ராமசாமி** | Calling : வெல்டிங் |
| Village : மேட்டூர் | Religion : இந்து |
| Taluk : மேட்டூர் | Age : 37 |

(A1, A3, A4 present. A2 absent. Filed 317 CrPC petition and allowed)

எதிரி தரப்பில் கு.வி.மு.ச 311 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்கு சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை</u>

1) மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் இரவு 7 மணிக்கு சென்றோம். நாங்கள் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை சேர சென்றபோதே எதிரிகளும் மருத்துவமனையில் இருந்தார்களா என்றால் நாங்கள் சென்ற பிறகுதான் அவர்கள் வந்தார்கள். எதிரிகள் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார்களா என்றால் அது பற்றி தெரியவில்லை. நாங்கள் மருத்துவமனையில் சேர்ந்தவுடன் மேல் சிகிச்சைக்கு அனுப்பிவைத்துவிட்டார்களா என்றால் முதலுதவி செய்தவுடன் சேலம் அரசு மருததுவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைத்தார்கள்.

**நேரமின்மை காரணமாக வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**